**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.1024/2024
Sessions)

Deposition of witness for ( Prosecution P.W.4
(Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | கௌரி சங்கர் | -- | |
| Father's Name | காந்தி | Calling | |
| Village | சுந்தரபாண்டியம் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 23rd day of January 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது சுந்தரபாண்டியம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 30.11.2023ம் தேதி இரவு சுமார் 10.15மணிக்கு மல்லி அருகில் உள்ள மாயத்தேவன்பட்டிக்கு நானும், எனது நண்பர் கிருஷ்ணமூர்த்தி என்பவரும் வந்து கொண்டிருந்தபோது கிருஷ்ணன்கோவில் போலிசார் அந்த இடத்தில் டார்ச் அடித்து படம் வரைந்தார்கள். அன்று மாலை அங்கு விபத்து நடந்ததாக கூறி அதற்கு சாட்சியாக கையெழுத்து போடச்சொன்னார்கள். அதில் நானும், என் நண்பர் கிருஷ்ணமூர்த்தி என்பவரும் கையெழுத்து போட்டோம். நான் கையெழுத்திட்ட பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 கண்ணராஜ் எனக்கு யாரென்று தெரியாது. போலிசார் விசாரிக்கும்போது தனக்க வேலையில்லையென்றும் வேலை தேடிக்கொண்டிருப்பதாகவும் கூறினேன். அன்று மாலை விபத்து நடந்ததாக போலிசார் விசாரிக்கும்போது சொல்லவில்லை. எனது நண்பர் கிருஷ்ணமூர்த்தியின் சொந்த ஊர் தென்காசி ஆகும். மல்லி அருகில் உள்ள மாயத்தேவன்பட்டி விலக்கு கிழமேல் சாலையாகும். சம்பவ இடத்தில் சக்கரத்தடமோ, வண்டியின் உடைந்த பாகங்களோ இருந்ததா என்றால் உடைந்த பாகங்கள் இருந்தன. அந்த இடத்தில் இரத்தக்கறை இருந்தது. பார்வை மகஜரில் என்னென்ன அந்த இடத்தில் செய்தார்கள் என்று விபரமாக எழுதப்பட்டிருந்தது. பார்வை மகஜரில் இரத்தக்கறை இருந்ததாகவோ, வண்டியின் உடைந்த பாகங்கள் இருந்ததாகவோ, சக்கரத்தடம் இருந்ததாகவோ எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை

என்றும், அந்த இடத்தில் எதுவும் பார்க்கவில்லை என்றும், போலிசார் எனது முன்னிலையில் எதுவும் தயார் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் என்னுடைய நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 23rd day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN Digitally signed by M VEERANAN Date: 2026.01.23 17:40:02 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**